சொல்லி அவர்கள் மனு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், அந்தக் குழாய்களை போடுகிற இடத்தில் அவைகளை உடைத்து விடுகிறார்கள் என்றும் அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் திட்டம் அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படும் என்பது எந்த அளவுக்கு உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. அப்படி அவர் சொல்லும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டாம் என்று அனைவரும் ஆண்டவனை பிரார்த்திப்போமாக. (குறுக்கீடுகள்)

சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 113—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டிக் கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிட்டுலொட்டி மற்றும் பாரைப்பட்டி சிற்றூர்களுக்கு குடிநீர் வசதித் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு திருப்திகரமாக இயங்கி வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு சிறப்பாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடந்து வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த வேலைகள் இன்னும் அங்கே முறையாக செயல்பட்டு நடக்கவில்லை என்று தகவல் எங்களுக்கு கிடைத்திருக்கிறதே, அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா? ஏனென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய தகவல் சரியாக இல்லை என்பது போல எங்களுக்கு தகவல் இருக்கிறதே, அதன் விவரங்களை ஆராய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு 3 எச்.பி. திறன் உள்ள மின் விசை நீரேற்று குழாய் மூலம் பாரைப்பட்டி, சிட்டுலொட்டி போன்ற சிற்றூர்களுக்கு 11 புதுக் குழாய்களை வைத்து குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்கிற தகவல் என்னிடத்தில் இருக்கிறது. அது சரியாக இல்லை, முறை சரி இல்லை என்று பொதுவாகச் சொல்லாமல், எங்கு முறையாக இல்லை, சரியாக இல்லை என்பதை விளக்கிச் சொன்னால், குறையை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.